செய்தி வெளியீடு எண்.959 நாள்.6.11.2008

தமிழக அரசு, அரசாணை எண் 604 உள் (போக்குவரத்து–5) துறை நாள் 25.05.2008 ல் கனரக வாகன ஓட்டுநர்கள் தங்களது உரிமம் புதுப்பிக்கும் பொழுதும் உரிமத்தினை மேற்குறிப்பு செய்யும் பொழுதும் ஒரு நாள் சிறப்பு பயிற்சியினை பெற்றிருக்க வேண்டும் என நிபந்தனை விதித்து அதற்கென அங்கீகாரம் பெற்ற கனரக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் மேற்கண்ட பயிற்சியினை அளித்து சான்றுகள் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டு இருந்தது. இதன்படி மேற்படி அரசாணை 01.10.2008 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென போக்குவரத்து துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் தகுந்த அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்படி பயிற்சிக்கு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் சென்னை தரமணியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் அதிக பட்சம் ரூ. 300/- வசூலிக்கலாம் என நிர்ணயம் செய்து சரக அலுவலர்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகள் பயிற்சி அளிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இதற்கும் குறைவான தொகையை நிர்ணயம் செய்து தர தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தது.

3. மேற்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் அநேக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் மேற்படி பயிற்சி வகுப்புகளைச் சரியான முறையில் நடத்தாமலும் சான்றுகள் வழங்க அதிக கட்டணம் வசூலிப்பதாகவும் புகார்கள் வரப்பெறுகின்றன. இது ஒழுங்கற்ற செயல் மட்டும் அல்லாது எதற்காக இப்பயிற்சி சட்டபூர்வமாக வடிவமைத்து வெளியிடப்பட்டதோ அந்நோக்கத்தினை தவறாக பயன்படுத்த செய்யப்படும் செயலாகும்.

4. இதனைத் தொடர்ந்து முதன்மை செயலாளர்/ போக்குவரத்து ஆணையாளர் சென்னை அவர்களால் ந.க.எண். 61051/க1/2008 நாள் 05.11.2008 மூலமாக மீண்டும் தகுந்த அறிவுரைகள் போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு தனியே வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் சரியான முறையில் நிர்ணயிக்கப்பட்டபடி ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி அளித்து சான்றுகள் வழங்கி வருகின்றனவா எனவும் நிர்ணயிக்கப்பட்ட தொகை மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறதா எனவும் கண்காணிக்குமாறும், இதனை மீறி விதிமுறைகளுக்கு மாறாக செயல்படும் பயிற்சி பள்ளிகளின் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் இயக்கூர்தி ஆய்வாளர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இச்செய்தி கனரக ஓட்டுநர் உரிமதாரர்களின் கவனத்திற்கும் கனரக வாகன பயிற்சிப் பள்ளி உரிமையாளர்களுக்கெனவும் வெளியிடப்படுகிறது.

மேற்படி அறிவுரைகளை மீறும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் தொடர்பாக புகார்கள் வரப்பெற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகபட்ச தண்டனையான `ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமம் ரத்து' செய்யப்படும் நிலை ஏற்படும் எனவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது. எனவே, இதனை தவிர்த்து மேற்சொன்ன புகார்கள் எழாமலும், அதன் மூலம் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளில் இருந்து தங்களது ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமங்களை பாதுகாத்துக் கொள்ளும்படியும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமையாளர்கள் கேட்டுக்க்காள்ளப் படுகிறார்கள்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை–9.